06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ்

## மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

# தரம் 06

மூன்றாந் தவணை

## அலகு 20 – கம்பரிற் பாலர் கல்வி



தமிழ் ஆசான்

## "அகரம் தினேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

Tute 07

REGISTER NOW

0778054232

AGARAM DHINES ONLINE ACADEMY

## கம்பரிற் பாலர் கல்வி

### மெய் சொல்லல் நல்லதப்பா

மெய் சொல்லல் நல்லதப்பா - தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா!
கண்டதைச் சொல்லென்று சொன்னாலும்
உண்டதைச் சொல்லென்று சொன்னாலும்
மண்டை உடைத்திட வந்தாலும் - பொருள்
கொண்டு வந்துன்னிடம் தந்தாலும்
மெய் சொல்லல் நல்லதப்பா!
மெய் சொல்லல் நல்லதப்பா!
பின்னவன் கெஞ்சி நின்றாலும் - அன்றி
முன்னவன் அஞ்சிட நின்றாலும்
மன்னவரே எதிர் நின்றாலும் - புலி
தின்னவாறேன் என்று சொன்னாலும் - நீ
மெய் சொல்லல் நல்லதப்பா!
மெய் சொல்லல் நல்லதப்பா!

**அ. கீழே தரப்பட்டுள்ள அடுக்கிடுக்குத் தொடர்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

1. செக்கச்செவேல்
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

2. கன்னங்கரேல்
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

3. பட்டப்பகல்
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

Agaram Dhines

4.வெட்டைவெளி

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

5. முற்றுமுழுதும்

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

**ஆ. "நான் விரும்பும் பெரியார்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுங்கள்.**

**(பயிற்சிக் கொப்பியில் எழுதுங்கள்.)**

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

**இ. பின்வரும் மரபுச் சொற்களைப் பொருத்தமான இடைவெளியில் வைத்து நிரப்புங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| மணிகளை | கூட்டை | அரிசி | தோப்பில் | ஓலை |

1. தென்னந் ……………………………… குயில் கூவியது.
2. நெல் குற்றி ……………………………… ஆக்கினார்கள்.
3. ……………………………… வேலி அடைத்து முடிந்து விட்டது.
4. குருவிக் ……………………………… குலைக்காதே. கேடு உனை வந்து சேர்ந்திடுமே.
5. நெல் ……………………………… புறாக்கள் உண்டன.

**ஈ. தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் கீறிடுங்கள்.**

1. தனயன் என்பதன் ஒத்த சொல் (கணவன், மகன், சிறுவன்,தம்பி)
2. வேதியன என்பவர் (கோன்,வேதம்,மறையவர், வேங்கை)
3. முறையாக என்பது (தவறு, முறை, ஒழுங்காக, முறையற்ற)
4. வாய் புதைத்து என்பது (வாய்மூடி, வாயால், வாய்திறந்து, புகைத்து )
5. முடிக்கிறாள என்பது (முனிதல், முடங்கல், மூடுகிறாள். நிறை வேற்றுகிறாள்)





Agaram Dhines

**உ. பேச்சு வழக்குச் சொல்லுக்குப் பதிலாக எழுத்து வழக்குச் சொற்களைத் தொடர்புபடுத்துவோம்.**

| | |
|---|---|
| 1. அப்பிடியா | நினைப்பார்கள் |
| 2. பெரிசாக | சொல்லுகின்றாய் |
| 3. நினைப்பினம் | அப்படியா |
| 4. போறியா | வாழுகின்றாய் |
| 5. சொல்லுறாய் | பெரியதாக |
| 6. வாழுற | போகிறாயா |

**ஊ. தரப்பட்டுள்ள வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள சொல்லு க்கு, அடைப்புக்குள் உள்ள பொருத்தமான எழுத்து வழக்குச் சொல்லின்கீழ் கீறிடுவோம்.**

1. சிறுவர் இல்லத்தில் வாழுற பிள்ளைகள் (வாழும்,வாழுகின்ற )
2. உன்னைச் சிந்திக்க வைச்சிருக்குது (வைத்திருக்கிறது, வைச்சிருக்கும்) கடவுள்.
3. எவ்வளவு பெருமையாக இருக்கு. (இருக்குதெண்டு,இருக்கின்றது)
4. நான் கனவிலும் நினைக்கேல்ல.

   (நினைக்கவில்லை, நினைக்கயில்லை)
5. வாணி, சாந்தியின் பிறந்த நாளுக்குப் போகயில்ல. (போகவில்லை, போனதில்லை)

**ஏ. ஒழுங்கின்றிக் காணப்படும் சொற்களை ஒழுங்குபடுத்திப் பழ மொழிகளை ஆக்குங்கள்.**

1. நெஞ்சு / குறுகுறுக்கும் / குற்றமுள்ள

   ……………………………………………………………………………………………

2. சறுக்கும் / முழம் / சாணேற

   ……………………………………………………………………………………………

3. சுகதுக்கம் / சக்கரம் / சுழலும்

   ……………………………………………………………………………………………

4. பிடித்த / மூன்றுகால் / முயலுக்கு / தான்

   ……………………………………………………………………………………………

5. தெருவில் / கொல்லர் / விற்கலாமா? / ஊசி

   ……………………………………………………………………………………………



Agaram Dhines

ஏ. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருந்து கிடைக்கும் ஓரெழுத்துச் சொல் விடையைக் கொண்டு குறுக்கெழுத்து அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

1. பசுவின் மறுபெயர் : ஆ. கோ
2. நெருப்பின் ஒத்த சொல்
3. இது இல்லையேல் பேச இயலாது.
4. செவிக்கு இன்பம் தருவது.
5. வா இதற்கு எதிர்ச்சொல்?
6. வருடத்தின் முதல் மாதம்
7. கரம் என்றும் கூறுவர்.
8. பொருளை வைக்கப் பயன்படும்.
9. பேனையுள் எழுதப் பயன்படுவது.
10. தேனீக்கள் நாடிச் செல்வது.
11. உணவை அசுத்தமாக்கும் பிராணி.

**ஐ. கீழே தரப்பட்டுள்ள பாடலை இசையோடு பாடுங்கள். புலவரின் கருத்துக்களைக் கிரகியுங்கள். புழுக்கொடியல் உண்போம் அது உடலை வளர்க்கும் உணவு.**

**புழுக் கொடியல்**

பனம்பாத்தி பறித்திடு வோமே -நல்ல
பனங்கிழங்கு கிண்டியெடுத்திடு வோமே
இனமின மாகத் தெரிந்து - பின்பு
எடுத்துரித் துதலை வாலை யரிந்து

பக்குவமாக மிடாவில்-வைத்துப்
பாதி மிடாவுக்கு மேற்றண்ணீர் விட்டே
ஒக்க நெருப்பிட் டெரித்துப் - பின்னர்
ஒன்றொன் றாகவெடுத் தேயாற வைத்து

கூரிய கத்தியி னாலே - குந்தைக்
கோதியே வார்ந்திரண் டாகக் கிழித்து
நாரினிற் கோத்து நன்றாக - நாளுக்கு
நாட்காய வெயிலிலே வைத்தெடுப் போமே

பதமாகக் காய்ந்த பின் னாலே - அவை
பக்குவ மாகக் கழற்றி யெடுத்தே
இதமான தேங்காயின் சொட்டோ – டதை
எடுத்துக் கடித்துச் சுவைத் துண்ணு வோமே

பல்லில் லாதகிழ வருக்கும் - மற்றும்
பலருக்கு முணவாகும் ஒருமுறை சொல்வேன்
மெல்லிய ஒடியல் முறித்து -உரலில்
லிட்டே யிடித்துப்பின் தெள்ளி யெடுத்து

வெல்லமுந் துருவலு மொன்றாய்ச் - சேத்து
விரவிப் பிசைந்து விரும்பி யெடுத்தே
மெல்ல மெல்ல மென்று தின்னச் -சுவை
மேவிடும் வீரியங் கூடுமென் றாரே

Agaram Dhines

உண்ண உண்ணப் புழுக்கொடியல் -வாய்
ஊறி யூறிச் சுவை தேறிடுமே
வண்ணப் பனங்கிழங் கதுதான் - வேறு
மருந்துமா மென்றுமுன் சொல்லிவைத் தாரே.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

பொருள்:- மிடா - பெரியபானை : ஒக்க -சமமாக் : இதமான - விருப்பமான் :

வெல்லம் - சர்க்கரை : விரவி -கலந்து : மருந்து நோய்க்கு மருந்து

**ஓ. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பாடப் புத்தகத்தை அடிப் படையாகக் கொண்டு விடை எழுதுங்கள்.**

1.இராமனையும்,தம்பிமாரையும் எதிர்வு கொள்ளும் நாட்டில் உள்ள குடியான சனங்கள் என்ன எண்ணுகின்றனர்?

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

2. பெண்கள், ஆண்கள் யாவரும் அரசிளங் குழந்தைகளை எவ்விதம் பிரார்த்திக்கின்றனர்?

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

3. சிறியதாய் கைகேயி, இராமனுக்கு இட்ட கட்டளை (வாய்மொழிப் பரீட்சை) என்ன?

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

4. இராமன் மக்களை எவ்விதமாக விசாரிக்கிறான்?

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

5. இப்பாடத்தில் இடம் பெற்றுள்ள உவமைத் தொடர் மூன்றினைத் தருக.

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

**ஓ. கீறிடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புங்கள்.**

| | | |
|---|---|---|
| வளர்பிறைபோல | கைகேயி | தாமரை மலர் போல |
| முனிசிரேட்டர்கள் | ஆலகாலவிடம் போல | படைகளை |

Agaram Dhines

1. ……………………………………………… இராமனுக்குக் கல்வி கற்பித்தனர்.

2. இராமன் ……………………………………….. முகம் மலர்ந்து பிரகாசிக்கின்றான்.

3. இராவணன் ………………………………….. இழந்து வெறுங்கையோடு நின்றான்.

4. தாடகை ………………………………………. வாயைத் திறந்து கொண்டு வந்தாள்.

5. குழந்தைகள் ……………………………….. வளர்ந்து வருகிறார்கள்.

6. இராமனின் சிறிய தாயார் ……………………….. ஆவாள்.

**ஔ. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்துக் கிரகித்தபின் தரம் பட்டுள்ள வாக்கியங்களுக்கு விடை எழுதுங்கள்.**

**கண்ணகியின் அவலம்**

கணவனை இழந்த துயரம் கரைகாணாதவளாய்க் கண்ணகி கொலைக்களத்தை அடைந்தாள். கோவலன் மேனி இரத்த வெள்ளத் தில் கிடப்பதைக் கண்டாள் தழுவினாள் அழுதாள். குற்றம் சிறிதும் இல்லாத தன் கணவனைக் கொன்ற அரசனைக் காணச் சென்றாள். நீதி கேட்பேன் என்று நெறிதவறிய மன்னன் வாயிலை அடைந்தாள். வாயிற் காவலன் அவள் உருவைக் கண்டு அஞ்சினான்.

“காளியே வந்தனள்“ எனக் கலங்கினான். அவனை விளித்து கணவனை இழந்தவள் அரண்மனை வாசலில் நிற்கிறாள் என அரசனுக்கு அறிவிப்பாய்” என்றாள். காவலன் கடிதுசென்று மன்னனுக்குத் தெரிவித்தான். மன்னன் அவளை அழைத்துவர ஆணையிட்டான். விரிந்த கூந்தலும், புழுதிபடிந்த மேனியும் உடையவளாய் வந்த கண்ணகியைப் பார்த்து ”நீ யார்” என்றான் மன்னன்.

1. கோவலனின் மேனி கண்ட கண்ணகியின் நிலை எவ்வாறிருந்தது?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

2. கண்ணகி தான் வந்திருப்பதை எவ்விதம் மன்னனுக்கு அறிவிக்கும்படி கூறினாள்?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

3. கண்ணகியின் கோலம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………





Agaram Dhines

**∴ . கீழே தரப்பட்டுள்ள பாடல்களைப் பாடுவோம். அரிய கருத்துக் களைக் கிரகிப்போம். அதன்படி நடப்போம்.**

**உடல் நலம் பேணல்**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?
சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே
காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!
தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின், உணவும் :

Agaram Dhines